கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:26.12.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அலுவலகங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய கவன ஈர்ப்புக் கூட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், அலுவலகங்களில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதை கையாளும் முறைகள் பற்றிய கவன ஈர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. இயற்கை வள மேலாண்மை இயக்குநகரத்தை சேர்ந்த சுற்றுச்சூழலியல் துறை சார்பில் நடைபெற்ற இக்கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்தோடு துவங்கி சுற்றுச்சூழலியல் துறை தலைவர் முனைவர் பெ.தேவகி அவர்கள் வரவேற்புரை வழங்க இனிதே ஆரம்பித்தது. இந்நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய இயற்கை வள மேலாண்மை இயக்குநர் முனைவர் ப.பாலசுப்பிரமணியம் அவர்கள் பெண்கள் சுயமுயற்சியோடு முன்னேற வேண்டும் என ஊக்குவித்தார்.

இந்நிகழ்விற்கு தலைமை வகித்த பல்கலைக்கழக மாணவர் நல மையத்தின் முதல்வர் முனைவர் ந.மரகதம் அவர்கள் பேசும்போது பெண்கள் உடல் மற்றும் மன ரீதியாக சில பிரச்சனைகளை எதிர்கொள்ளும் போது, மிக தைரியமாக செயல்பட வேண்டும் என்றும், சுய மரியாதையை ஒருபோதும் விட்டுக்கொடுக்கக் கூடாது எனவும் தெரிவித்தார். மேலும் ஆண், பெண் பாகுபாடு கூடாது எனவும், பெண்களின் பல்நோக்கு செயல்பாடுகளைப் பற்றியும் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய சமூக செயல்பாட்டாளரும், வழக்கறிஞர் முனைவர் ஜி.பி.கோதனவள்ளி, தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். அவர் பேசும்போது பெண்கள் தொழில் நிறுவனங்களிலும், தான் வேலை செய்யும் இடங்களிலும் உடல் மற்றும் மன ரீதியாக பல துன்புறுத்தல்களை சந்திக்கின்றனர். இது போன்ற துன்புறுத்தல்கள் நடைபெறுவதற்கு காரணம் மது அருந்துதல், புகை பிடித்தல், மற்றும் போதை பொருட்களை பயன்படுத்துதல் ஆகியவையே எனவும், பெண்கள் எதிர்பாலினரிடம் ஆரோக்கியமான உறவைப் பேண வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் அவர் பெண்கள் எவ்வாறு இதுபோன்ற சவால்களைத் தவிர்ப்பது, பெண்களை பாதுகாக்கும் சட்ட வறைமுறைகள், திட்டங்கள் ஆகியவற்றை பற்றி விளக்கினார். பெண் சிசுக்கொலை, குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான தாக்குதல்கள், ஆகியவற்றை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மேலும் போதைப் பொருட்களின் ஆதிக்கம் எவ்வாறு மனித இனத்தை பாதிக்கிறது என்பதையும் விவரித்தார். சுற்றுச்சூழல் துறை பேராசிரியர் முனைவர் எ.பரணி நன்றி யுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**